அ.வ.எண். 60/2019

பெயர் – பாலமுருகன் (வா.சா.2)

நாள் – 05.09.2022

<u>1, 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி</u>

இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நீதிமன்றத்திற்கு சாட்சி அளிக்க என்னை யார் அழைத்து வந்தார் என்றால் சோலைசாமி அழைத்து வந்தார். எனது நிருபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டிருக்கும் விலாசத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1980 ம் வருடம் பிறந்தேன். எனது நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கரலிங்கத்தை தெரியமா என்றாலும் பார்த்துள்ளேனா என்றாலும் அவரை எனக்கு தெரியும். நான் அவரை பார்த்துள்ளேன். நிருபணவாக்குமூலத்தில் குடும்ப ஏற்பாடானது 1960 ல் ஏற்பட்டதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குடும்ப ஏற்பாடு நடந்ததாக நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சங்கரலிங்கத்திற்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் நாகலாபுரம் கிராமத்தில் எவ்வளவு காலமாக குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்ததில் இருந்து அங்கு தான் இருக்கிறேன். சண்முகவேல் செட்டியாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஞாபகமில்லை. சங்கரலிங்க செட்டியார், சண்முகவேல் செட்டியார் எந்த ஆண்டு இறந்தார்கள் என்று தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. சோலைசாமி யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியும். சங்கரலிங்கம், சின்னபாலு, இந்திரா குமாரி. சுப்பம்மாள், பாப்பா , கணபதி ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். யார் யார் மீது சோலைசாமி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் தாவா சொத்தில் விறகு வெட்டுவதற்கு நான் தான் ஆள் கூட்டிபோனேன். போன இடத்தில் பிரச்சனை ஆகி இருக்கன்குடி காவல் நிலையத்தில் கேஸ் கொடுத்த போது கேட்டு தெரிந்து கொண்டேன். யார் யாருக்கு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சின்னபாலு சங்கரலிங்கத்திற்கு பிரச்சனை வந்தது. சின்னபாலு சங்கரலிங்கம் யார் என்றால் சோலைசாமியின் அண்ணன் தம்பி ஆவார்கள்.

இந்திராகுமாரி யார் என்றால் சோலைசாமியின் மனைவி ஆவார். சுப்பம்மாள், பாப்பா ஆகியோர்கள் யார் என்றால் சுப்பம்மா சங்கரலிங்கத்தின் மாமியார் ஆவார். கணபதி சங்கரலிங்கத்தின் சித்தப்பா மனைவி ஆவார். சுப்பம்மாள் பாப்பா என்ற கணபதியின் தகப்பனாரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தபசில் சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சோலைசாமி பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். சோலைசாமி பெயரில் தாவா சொத்துக்கு பட்டா இருப்பதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டா எண். தெரியுமா என்றால் 63 ஆகும். சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. இந்திராகுமாரியின் உடன்பிறந்தவர்கள் யார் என்றால் சங்கரலிங்கத்தின் மனைவி கண்ணகியும் இந்திராகுமாரியும் உடன் பிறந்தவர்கள். இந்திராகுமாரிக்கு உடன்பிறந்த ஆண் வாரிசுகள் யாரும் உள்ளார்களா என்றால் அண்ணன் தம்பி உண்டு. ஆனால் யார் யார் என்று தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் நிருபணவாக்குமூலத்தில் 2ம் பக்கத்தில் கடந்த 19.07.2019ம் தேதியன்று வாதி சோலைசாமியும் 3ம் பிரதிவாதியான அவரது மனைவியும் என் நாகலாபுரம் கிராமத்திற்கு வந்தார்கள். தபசில் 3ம் சொத்திற்கு வடபுறம் இருந்து காலிமனையில் உள்ள கருவேலி மரங்களை சுத்தம் செய்து குளியல் அறை மற்றும் கழிப்பறை கட்டுவதற்கு வாதி சோலைசாமியும் அவரது மனைவியும் ஏற்பாடு செய்யபட்டு 2ம் பிரதிவாதியான சின்னபாலு என்பவர் தகராறு செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சங்கரலிங்கம் தகராறு செய்யபட்டதாக நிருபணவாக்குமூலத்தில் சொல்லபட்டுள்ளதா என்றால் இல்லை. சோலைசாமிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடி கொள்ளுமாறு காவல் நிலையத்தில் அறிவுரை வழங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சோலைசாமி எவ்வித முகாந்திரமும் இல்லாமல் சங்கரலிங்கம் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புகார் மனு விசாணையின் போது நான் காவல் நிலையம் சென்றேனா என்றால்இல்லை. சோலைசாமி கொடுத்த புகாரின் மீது மனு ரசீது கொடுக்கப்பட்டதா என்றால் அதுபற்றி தெரியாது. 20.02.2008ம் தேதியிட்ட பதிவு செய்யபடாத கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. தபசில் சொத்துகள் சங்கரலிங்கத்திற்கு பாத்தியப்பட்டதாக நான்

சொல்லியுள்ளது போல் சங்கரலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. 1960ம் ஆண்டு சங்கரலிங்கம் குடும்பத்திற்குள் வாய்மொழி குடும்ப ஏற்பாடு ஏற்பட்டுள்ளதாக நான் சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. வாதி இருக்கன்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும் அதனடிப்படையில் விசாரணை நடைபெற்றதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கூலி வேலை பார்க்கிறேன். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னையும் சேர்த்து 8 பேர்கள். 3 ஆண்கள், 5 பெண்கள் ஆவார்கள். என்னுடன் பிறந்த மற்ற இரண்டு ஆண்வாரிசுகள் பெயர் கருப்பசாமி, ஆறுமுகம் ஆகும். அவர்கள் என்ன வேலை பார்க்கிறார்கள் என்றால் ஆடு மேய்க்கிறார்கள். எனது தம்பி கருப்பசாமி சோலைசாமியிடம் விவசாய நிலத்தை குத்தகைக்கு பெற்று பயிர் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது தம்பி கருப்பசாமி குத்தகைக்கு இடம் பெற்றுள்ளதால் நான் வாதிக்காக ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3ம் பிரதிவாதி தரப்பில் கு.வி</u>

தபசில் சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் எம்.நாகலாபுரம் கிராமத்தில் உள்ளது. வாதி பிரதிவாதிகளை எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி இந்திராகுமாரி வாதிக்கு என்ன உறவு என்றால் மனைவி ஆவார். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சங்கரலிங்கத்திடம் இருந்து சண்முகம் செட்டியார் எழுதி வாங்கி சோலைசாமி மற்றும் சங்கரலிங்கம் பிரித்து கொண்டார்கள். 1960ம் ஆண்டு சங்கரலிங்கம் குடும்பத்துக்குள் வாய்மொழி ஏற்பாடு செய்யபட்டது என்றால் சரிதான். அந்த குடும்ப ஏற்பாட்டின் படி தாவா 3 லக்க சொத்தின் மேற்கு பகுதி வாதிக்கு பிரித்து கொடுக்கபட்டது என்றால் சரிதான். கிழக்கு பகுதி 1ம் பிரதிவாதி சங்கரலிங்கத்திற்கு ஒதுக்கபட்டது என்றால் சரிதான். மேற்கு பக்கம் சோலைசாமிக்கு ஒதுக்கபட்ட இடத்தில் வடபுறத்தில் சோலைசாமி குளியல் அறை மற்றும் கழிவறை கட்டும் போது பிரச்சனை நடந்தது என்றால் சரிதான். யார் பிரச்சனை செய்தார்கள்

என்றால் சின்னபாலு பிரச்சனை செய்தார். காவல் நிலையத்தில் சோலைசாமி புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்.